மனைப்பிரிவு வரைபடம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருநெல்வேலி மாவட்டம்.


இராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி, வடக்குவள்ளியூர் பகுதி-1 கிராமம்,

சர்வே எண்: 1784 / 1B - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(வடக்கு வள்ளியூர் உள்ளூர் திட்டப்பகுதி)

அளவு = 1:800

இணையதள விண்ணப்பம் எண் : PH5PG2TX / 2025 / TCP

வ



குறிப்பு

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு	=	8630.00 ச.மீ (2.13ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு	= (-)	2075.50 ச.மீ
எஞ்சிய மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	6554.50 ச.மீ
கோரிய மனைகள்	-	31
ஒதுக்கிய மனைகள்	-	30
மனைப்பிரிவு இடத்தின் எல்கை	-	
நிலையில் உள்ள சாலை	-	

பொது ஒதுக்கீடுகள்:-

(TNCDBR விதி 47(6)- ன் படி பூங்காவின் பரப்பு 656.00ச.மீ - க்கான அரசு வழிகாட்டி மதிப்புத்தொகை ரூ.17,44,960 /- நாள்.29.10.2025 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

I) வடக்குவள்ளியூர் பேரூராட்சிக்கு தானப்பத்திரம் எண்.4221/2025, நாள்.24.10.2025 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

i) உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பு - 2075.50 ச.மீ

ii) PUBLIC PURPOSE - (உள்ளாட்சி உபயோகம்) - 50.00 ச.மீ (0.76%)

II) தானப்பத்திரம் எண்.4220/2025, நாள்.24.10.2025 மூலம் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

i) PUBLIC PURPOSE - (TANGEDCO உபயோகம்) - 50.00 ச.மீ (0.76%)

மூலை முடக்கு : 12.0மீ அகல வரை உள்ள சாலைகளுக்கு : 1.5மீ x 1.5மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண்: 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை நாள்:16.08.2003-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடக்கு, மற்றும் பொது உபயோகம் ஒதுக்கீடு பகுதியினை பேரூராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இவ்விடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை ஏதும் செய்யப்படவில்லை என்றும், நில ஆர்ஜித நடவடிக்கை தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புத் துறையால் இரத்து செய்யப்படும்.
4. அரசாணை நிலை எண்:181 மற்றும் 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020 மற்றும் 16.07.2022 - ன் படி வடக்குவள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6'X4' என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
6. இம்மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.26022/2025, தீர்ப்புரை நாள்.23.09.2025 - ன் தீர்ப்பு மற்றும் அரசு வழக்கறிஞர், Standing Counsel for Tirunelveli Corporation அவர்களின் 14.10.2025 தேதிய சட்டக்கருத்துருவின் அடிப்படையில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நிலுவையில் உள்ள வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தின் வழக்கு எண். O.S.No.138/2022 - ன் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது.

ம.வ/திலி.மா.ந.ஊ.அ.எண்: SWP/113/2025

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி

Signature Not Verified
Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2025.10.31 12:51:48

Signature Not Verified
Signed by: Executive Officer
Location:Tirunelveli
Date:2026.01.09 13:51:04